**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT COURT MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO. 208/2017 PW 4**

Name : கே. ரமணன்
Father's name : எம். எம். கல்யாணசுந்தரம்
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 26th February 2019

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை மாவட்டம் தேனி மெயின்ரோடு அச்சம்பத்து என்ற முகவரியில் குடியிருந்து கொண்டு லாலா சத்திரம் காலனி அருகே எங்களுக்கு சொந்தமான தோட்டத்தில் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 26-09-2014 அன்று மாலை 5 மணிக்கு எங்கள் தோட்டத்து காவல்காரர் ஆறுமுகம் என்பவர் போன் மூலம் தோட்டத்தில் 3 நபர்கள் சேர்ந்து ஒருவரை அடித்து கொன்று விட்டார்கள், இறந்தவர் தோட்டத்தில் கிடப்பதாக கூறினார்கள். வாட்ச்மேன் ஆறுமுகத்தை பார்த்தவுடன் மேற்படி கொலை செய்த நபர்கள் ஓடி விட்டதாகவும், என்னிடம் தகவல் கூறினார். நான் உடனே என் சகோதரர் சரவணன் அவர்களுக்கு தகவல் சொன்னேன். அருகில் உள்ள விஏஓ அலுவலகத்தில் என் சகோதரர் சரவணன் மற்றும் நானும் தகவல் சொன்னோம். விஏஓ மற்றும் தலையாரி, நான், எனது சகோதரர் சரவணன் ஆகியோர் சம்பவயிடமாகிய எங்களது தோட்டத்திற்கு சென்று பார்த்தபோது அங்கு ஒருவர் முகம் சிதைந்த நிலையில் இறந்து கிடந்தார். விஏஓ அருகில் உள்ள நபர்களிடம் விசாரணை செய்தார். விசாரணையில் இறந்த நபர் யாரென்று தெரியாத காரணத்தினால் விஏஓ நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையம் சென்று புகார் அளித்தார். இறந்துபோன நபர் சாகுல்ஹமீது என்பது அவருடைய சட்டை பையில் இருந்த மோட்டார் ஓட்டுனர் உரிம அட்டை மூலம் தெரிந்து கொண்டோம். ஓடி சென்றவர்கள் யாரென்று எனக்குதெரியவில்லை. இது சம்பந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறுவிசாரணை**

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு,
அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து
பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்து காண்பித்து
அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்/கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி
மதுரை